புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# தமிழக மகளிர் விளையாட்டில் கழங்கும் தட்டாங்கல்லும்

*திருமதி. சா.மணிமேகலை,*
*பகுதி நேர முனைவர் பட்டஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),*
*திண்டல், ஈரோடு-638012.*

=====================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*தமிழர்கள் பல்வேறு தனித்துவங்களைப் பெற்றிருப்பது போலவே உடல் மன ஆரோக்கியத்திற்கேற்ப விளையாட்டிலும் தனிச்சிறப்பும் கூடிய நுட்பமான விளையாட்டுக்களை விளையாடினர்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவர் உடல் அமைப்பிற்கும் உள்ள நிலைக்கும் ஏற்றவாறு பலவகையான விளையாட்டுக்கள் விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டனர். அவற்றுள் மகளிர் விளையாடும் விளையாட்டில் ஒன்றுதான் கழங்காட்டம். இவ்விளையாட்டு பற்றிய தகவல்கள் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. கழங்காட்டத்தின் தொடர்ச்சியாக பிற்கால மகளிர் கற்களை வைத்து விளையாடினர் அதற்கு தட்டாங்கல் என்று பெயர் ஏற்பட்டது.*

*கழங்காட்டம் பற்றியும் இன்றைய தட்டாங்கல் ஆட்டம் பற்றியும் சில சான்றாதாரங்களுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

*திறவுச்சொல்*

*கழங்கு – கிராமப்புற விளையாட்டு – தட்டாங்கல் – கழங்காட்டம் - கழற்சிக்காய் - கையாடு வட்டில் – வேலன் - அம்மானை ஆட்டம் – பாண்டிக்கல் – சோழி.*

*முன்னுரை*

*சங்க காலப் பெண்கள் வீரமும் விவேகமும் கொண்டிருந்ததோடு தங்களுக்கென்று தனி விளையாட்டுக்களை விளையாடுவதிலும் சிறந்திருந்தனர். அவற்றுள் கழற்சிக்காய் கொண்டு விளையாடிய கழங்காட்டம், மகளிரின் வழக்கமான விளையாட்டில் ஒன்றாகத் தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றிலும் கூறப்படுகின்றன. இவ்விளையாட்டின் தொடர்ச்சி தட்டாங்கல் விளையாட்டாக கிராமப்புற மகளிரிடையே விளையாடப்பட்டது. இவ்விளையாட்டு பற்றி இலக்கியங்கள் வாயிலாகவும் கள ஆய்வு வழியாகவும் ஆராய்ந்து கூறுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

*கழங்காட்டம் - பொருள்*

*கழங்கு என்னும் காய் கழற்சி என்னும் செடியில் காய்க்கக் கூடியது. இக்காய் உருண்டையாக நெல்லிக்காய் போன்று பழுப்பு நிறத்தில் இருக்கும். இக்காயைக் கொண்டு பெண்கள் விளையாடியதால் கழங்காட்டம் என்று அழைக்கப்பட்டது.*

*சங்க காலத்தில் கழங்காட்டம்*

*சங்ககால மகளிர் ஆடுருவியாகக் கழற்சிக்காயினைத் தூக்கிப்போட்டு விளையாடினர். அதனால் “இதற்கு கையாடு வட்டில்”[1] என்றும் கழங்காட்டம் என்றும் பெயர் ஏற்பட்டது. பிற்காலத்தில் “கழற்சி” கழல் என மருவியது.*

செல்வ மகளிர் இயற்கையான கழற்சிக் காயிற்குப் பதிலாக யானைத்தந்தத்தாலும் "பொன்னாலும்" முத்தாலும் செய்யப்பட்ட கழங்குக் காய் கொண்டு விளையாடியதாக சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

- வார்கோல்,

செறியரிச் சிலம்பின், குறுந்தொடி மகளிர்

பொலஞ்செய் கழங்கின் தெற்றியாடும்.[2] - புறம். 36

ஆண் பொருணை ஆற்றங்கரை வெண்மணலில் மகளிர் பொன்னால் செய்த கழங்கு விளையாடியதாக மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

சங்ககால மகளிரின் அன்றாட விளையாட்டுகளில் கழங்காட்டம் இருந்துள்ளதற்குச் சான்றாக, தாய் தன் மகள் கழங்காடியது பற்றிக் குறிப்பிடுகிறாள்.

"இளந்துணை ஆயமொடு கழங்கு

உடன் ஆடினும்

உயங்கிற்கு அன்னை என் மெய்"[3] அகம் - 17

வேலனின் கழங்கு

வேலன் கழங்கினை வைத்துக் குறிபார்த்துக் கூறியதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

"ஆகுவது அறியும் முதுவாய் வேல!

கூறுகமாதோ நின் கழங்கின்

திட்பம்"[4] அகம் - 195

வேலன் கழங்காடி முருகனைப் பாடினான் போன்ற செய்திகளை நோக்கும்போது கழங்காட்டம் முதலில் குறிஞ்சி நிலத்தில் தோன்றிப் பரவியிருக்கலாம் என்று கருத முடிகிறது.

வேலன் முருகனைப் புகழ்ந்து பாடிக் கழங்காடினான் என்று குறிப்பிடும் சங்கப் பாடல்கள் பெண்கள் கழங்காடும் பாடலைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

கழங்காடும் போது மகளிர் பாடிய பாடல்கள் எளியோர் பாடும் நாட்டுப்புறப் பாடல் வடிவில் அமைந்திருக்கலாம். அதனால் கற்றறிந்த புலவர்கள் இதனைக் கூறாது விட்டிருக்கலாம்.

சங்க இலக்கியங்களுக்குப் பின் தோன்றிய காப்பியங்களில் கழங்காட்டம் பற்றி அதிகமாகக் குறிப்புகள் இல்லையெனினும் சிலப்பதிகாரம் வேட்டுவரியில் கொற்றவைக்குக் கழங்கு படைத்து வழிபட்ட குறிப்பு உள்ளது. சிலப்பதிகாரத்தில் அம்மானை ஆட்டம் என்று குறிப்பிடுவது கழங்காட்டமே என்று அறிஞர்கள் கருத்தும் நிலவுகிறது.

சிற்றிலக்கியங்களில் கழங்காட்டம்

உலா இலக்கியத்தில் பெதும்பைப் பருவ மகளிரின் ஆட்டமாக கழங்காட்டம் இடம்பெற்றுள்ளது. திருவானைக்காவுலா, ஏகம்பர நாதருலா, திருக்குற்றால நாதர் உலா, போன்றவற்றோடு பிற உலாக்களில் கழங்காட்டம் பற்றிய செய்திகள் உள்ளன.

கடம்பர் கோயில் உலாவில் நீலம், முத்து, பச்சை, மாணிக்கம், கோமேதகம், வைரம், பவளம் போன்ற ஏழு வகை மணிகளால் ஏழு கழங்குகளைக் கொண்டு ஒன்றுக்கு ஏகாம்பரமும், இரண்டுக்கு இருவர் தேடும் மலையும், மூன்றுக்கு திருச்சிராப்பள்ளியும், நான்கிற்கு நான்மாடக் கூடலும், ஐந்திற்குப் பஞ்ச நிதியும், ஆறுக்கு ஆறு பெண்கள் அட்டமா சித்தி பெறப்பட்ட மங்கையும், ஏழுக்கு ஏழு தலங்களும் பற்றிப் பாடிக் கழங்காடிதாகக் கூறப்படுகிறது.

"கந்தரம்போ னீலக் கழங்கும் களங்கமில்லா

சந்திரன்போன் முத்தின் நனிக்கழங்கும் எந்தையுடற்

பாதியன்ன பச்சைப் பசுங்கழங்கும்"[5] - கடம்பர் கோயில் உலா

என்று கடம்பர் கோயில் உலாப் பாடலின் 180 முதல் 183வது கன்னிகள் வரை கழங்கு பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. திருக்காளத்தி நாதருலாவிலும் இத்தகு குறிப்புள்ளது. பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் பெண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கணங்களாக முறையே 8, 9, 10 பருவங்கள் கழங்கு அம்மானை, ஊசல் பாடுவது மரபாக உள்ளது.

அன்றைய கழங்கும் பிற்காலத் தட்டாங்கல் விளையாட்டும்

பழங்கால மகளிர் விளையாடிய கழங்கு விளையாட்டு காலப்போக்கில் கற்களைக் கொண்டு தட்டிப்பிடித்து விளையாடியதால் தட்டாங்கல் விளையாட்டாக மாற்றம் கொண்டது.

கழற்சிக்கொட்டைகளைக் கொண்டு விளையாடியதற்குப் பதிலாக மணியாங்கற்களைக் கொண்டு விளையாடியதால் சில மாவட்டங்களில் பாண்டிக்கல் என்றும் இவ்விளையாட்டு அழைக்கப்படுகிறது.

*தட்டாங்கல் விளையாட்டின் விதிமுறைகள்*

கற்களைக் கீழே வைத்துவிட்டு ஒரு கல்லை மட்டும் மேலே எறிந்து அது கீழே வருவதற்குள் கீழே வைத்த கற்களை ஒன்று இரண்டு மூன்று என்று முறைப்படி எடுக்க வேண்டும்.

"இவ்வாறு பன்னிரண்டு முறைகள் தொடர்ந்து விளையாட வேண்டும் எறிந்த கல் கீழே விழுந்து விட்டால் மற்றொருவர் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடலாம்"[6]

இவ்வாறு விளையாடும் தட்டாங்கல் விளையாட்டு மூன்றாங்கல், ஐந்தாங்கல், பத்தாங்கல், பலகல் என்றும் வகைப்படுத்துலாம்.

*தட்டாங்கல் (கழங்காட்டம்) விளையாட்டின் பயன்கள்*

தட்டாங்கல் மேலே எறிந்த கல் கீழே விழுவதற்குள் கீழே உள்ள கல்லை முறைப்படி எடுக்க வேண்டும் என்பதால் மனம் வேறு எங்கும் செல்லாமல் ஒரு நிலைப்படும். பிடிக்கும் திறன் மேம்படும் பெண்களின் கை நரம்புகள் வலுவடையும் விரல்களுக்கு இரத்த ஓட்டம் அதிகரிப்பதோடு மனதும் தன்னம்பிக்கை அடையும்.

இதுபோன்ற விளையாட்டுக்களை மகளிர் தொடர்ந்து விளையாடினால் உடலும் மனமும் நலம் பெறும் என்பதில் ஐயமில்லை.

"விளையாட்டு எல்லா மனித இணங்களிலும் பண்பாட்டிலும் காணப்படும் ஒன்றாகும்"[7] இதனை வரும் சந்த்தியினரும் தொடர வேண்டும்.

*வேலனின் கழங்கும் தற்கால சோழியும்*

சங்ககாலத்தில் கழங்குக்காய் கொண்டு வேலன் குறி கூறியதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் சோழியைக் கொண்டு குறி பார்க்கும் பழக்கம் தமிழக கிராமங்களில் உள்ளது. இன்றளவும் சில கிராமங்களில் வாழும் மக்கள் தங்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டாலோ அல்லது சில காரியங்களைச் செய்வதற்கோ சோழி கேட்பது வழக்கமாகவுள்ளது. கிராமத்தில் வாழும் வயதில் முதிர்ந்த சோழி பார்ப்பதில் கை தேர்ந்தவர்களிடம் சோழி பார்க்கப்படுகிறது.

"கொங்கு நாட்டில் வாழும் கிராமப் பெண்கள் தாங்கள் நினைக்கும் காரியம் வெற்றி தருமா தோல்வி நல்குமா என்று உருண்டையான கழற்சிக்காய் வடிவான கற்களை இருபத்து ஒன்று, பதினெட்டு போன்ற ஒற்றைப்படை எண்ணிக்கையில் இரு கைகளிலும் உருட்டிப்போட்டு பிரித்துப் பார்ப்பது நடைமுறையில் உள்ளது."[8]

*முடிவு*

தமிழக மகளிர் விளையாட்டுக்கள் அறிவுத்திறம் சார்ந்தவையாக அமைந்துள்ளன. அவ்வகையில் கழங்காட்டம் (இன்றைய தட்டாங்கல்) சிறந்துள்ளது. தமிழர் விளையாட்டில் கூட ஒழுங்கு முறையை அக்காலம் முதல் இன்று வரை கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால், இக்கால தலைமுறை மகளிர் அறிவுத் திறமும் உடல் பயிற்சிக்காகவும் விளையாடும் இவ்விளையாட்டுக்களை விடுத்து கைப்பேசியிலும், கணினியிலும் தங்கள் நேரத்தை செலவிட்டு வருகின்றனர். மகளிர் தங்களுக்கான விளையாட்டுக்களை விளையாடி வருங்கால தலைமுறைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கினால் மட்டுமே அவர்கள் உள்ளத் திறமும் உடல் அமைப்பும் சிறந்து விளங்கும் என்பது திண்ணம்.

*அடிக்குறிப்பு*

1. புலவர். தங்கால் பொற்கொல்லனார், அகநானூறு, பாடல் 108, வரிகள் 15-17.
2. புலவர். ஆலத்தூர் கிழார், புறநானூறு, பாடல் 36, வரிகள் 3-5.
3. புலவர். கயமனார், அகநானூறு, பாடல் 17, வரிகள் 7-8.
4. புலவர். கயமனார், அகநானூறு, பாடல் 160, வரிகள் 14-15.

5. ஆசிரியர் பெயர் இல்லை, கடம்பர் கோயில் உலா, பதிப்பித்தவர் உ.வே.சாமிநாத ஐயர்.
6. தகவலாளர். ராதாமணி, வயது 70, படிப்பு ஐந்தாம் வகுப்பு, கொடுவாய், திருப்பூர் மாவட்டம்.
7. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல், பக். 247.
8. மயிலாத்தாள், வயது 95, படிப்பு இல்லை, தாராபுரம், திருப்பூர் மாவட்டம்.


துணைநூற்பட்டியல்

1. ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்) - அகநானூறு
   கௌரா பதிப்பகம்,
   4, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு,
   திருவல்லிக்கேனி, சென்னை-5.
   போன் - 9445673791
2. புலியூர் கேசிகன் (உரையாசிரியர்) - புறநானூறு
   கௌரா பதிப்பகம்,
   4, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு,
   திருவல்லிக்கேனி, சென்னை-5.
   போன் - 9445673791
3. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம்
   பொதிகை பப்ளிசர்ஸ் (பி) லிட்,
   கன்னியாகுமரி மாவட்டம்,
   தமிழ்நாடு, இந்தியா.
   www.pothigaipublishers.com
4. சு. சக்திவேல் - நாட்டுப்புறவியலாய்வு
   மணிவாசகர் பதிப்பகம்,
   சென்னை.
   போன் - 914425361039

இணையம்

1. https:aaron-thoppu.blogspot.com
   9 Apr 2020.


********* ********* ********** ********* ********* ********** ********** **********